மறுபடியும் ஆழப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்குரிய ஆய்வுகளை நடத்துவதற்கு வேண்டிய உத்தரவுகளை அரசாங்கம் எடுக்கும். அதேநேரத்திலே பழுதுபட்டிருக்கிற அந்தக் கால்வாய்களையெல்லாம் சீரமைப்பதற்கு வேண்டிய முயற்சிகளையும் அரசு எடுக்கும்.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் பரிசீலனை செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மிகவும் நன்றி. அதே சமயத்தில் அந்தப் பெருமாள் ஏரிக்கு வரக்கூடிய நீர் வரத்து வாய்க்கால் பரவனாறு வழியாகத்தான் பெருமாள் ஏரிக்கு வரத்து வருகிறது. பரவனாறின் இருபுறமும் கரைகள் இல்லாத காரணத்தாலே, இருபுறமும் உள்ள கிராமங்களில் உள்ள மக்கள், சுமார் 20 கிராமங்களைச் சேர்ந்தவர்கள் மழைக் காலங்களிலும் வெள்ளக்காலங்களிலும் பாதிக்கப்பட்டு வெளியேறுகிறார்கள். அதுமாத்திரமல்ல, நெய்வேலி காட்டாமணிச் செடிகளும் அந்த வாய்க்காலை அடைத்து இருக்கின்றன. ஆகவே இரண்டையும் தவிர்க்கிற வகையில் புதிதாக அணையை ஏற்படுத்தியும் அந்த நெய்வேலி காட்டாமணியை அப்புறப்படுத்துவதற்கும் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய உணர்வை நான் புரிந்து கொண்டேன். அப்படி கரைகள் பலவீனமாகவும், மோசமாகவும் இருக்கின்ற பொழுதெல்லாம் அதை ரிப்பேர் செய்வதற்கும், காட்டாமணி செடிகளை யெல்லாம் அப்புறப்படுத்துவதற்கும் வேண்டிய முயற்சிகளை யெல்லாம் அரசாங்கம் மேற்கொள்ளும்.

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியத்தில் திருமலைராஜன் ஆற்றில் ரெகுலேட்டர்.

360—(* வினா எண். 7559) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் குடவாசல் ஒன்றியத்தில் புதுபாகசாலை கிராமத்தில், திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே ரெகுலேட்டர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS

[1987 ஏப்ரல் 9

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் ஒன்றியம், திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே, புதுபாகசாலையிலே ஒரு ரெகுலேட்டர் கட்டவேண்டுமென்ற கேள்வியை நான் எழுப்பி இருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இயலாது என்று அறிவித்து இருக்கிறார்கள். அதற்குக் காரணம் பாண்டிச்சேரி அரசாங்கம் அதற்கு மறுப்பு தெரிவித்திருக்கிற காரணத்தாலே அப்படி கட்டப்படவில்லை என்றும், அதைப்போல 1924 ஆம் ஆண்டு காவிரி ஒப்பந்தத்தின் பிரகாரம் கர்நாடக அரசு தமிழகத்திற்கு, தொடர்ச்சியாக தண்ணீர் தந்தால் தான், நாம் பாண்டிச்சேரி அரசுக்கு தண்ணீர் தந்தாக வேண்டும். ஆனால் கர்நாடக அரசோ நமக்கு தண்ணீர் தர மறுத்துவிட்டது. எனவே அதை கருத்தில்கொண்டு நமக்கு எப்படி கர்நாடக அரசு தண்ணீர் கொடுக்க மறுக்கிறதோ அதைப்போல நாமும் பாண்டிச்சேரி அரசுக்கு தண்ணீர் தரத்தேவையில்லை. அங்கே கிட்டத்தட்ட 15 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பாதிக்கப்படுகிற காரணத்தால் தஞ்சை மாவட்டத்தின் பெரும்பகுதி அந்த ஆற்றின் மூலமாகத்தான் விவசாயம் நடைபெறுகின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எப்படி கர்நாடக அரசாங்கம் நமக்குத் தண்ணீர் கொடுக்கவில்லையோ அதைப்போல பாண்டிச்சேரிக்கு நாம் தண்ணீர் கொடுக்க வேண்டாம் என்று சொன்னார்கள். கர்நாடக அரசு தவறு செய்வதாகச் சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறோம். ஆகவே அந்தத் தவறை நாமும் செய்ய வேண்டுமென்று சொன்னால், நாமும் அவர்களும் ஒன்றாகிவிடுவோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த திட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல் கொடுக்கவில்லை. கடைமடைப் பகுதியில் இருக்கும் விவசாயிகள் எதிர்க்கிறார்கள். பாண்டிச்சேரி அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் உறுப்பினர் சொல்கின்ற கோரிக்கையை அதிகாரிகளோடு பேசி ஏதாவது ஒரு வழி செய்ய முடிகிறதா என்பதைப் பார்க்கிறேன்.

1987 ஏப்ரல் 9]

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதும்போல காவிரியிலே தண்ணீர் நிறைய வருமேயானால் அந்த ஆறுகளில் வருகின்ற தண்ணீர் ஹெல்ட் ஆப்' ஆகி வாய்க்கால்களில் பாய்வதற்குச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இப்போது கர்நாடக அரசாங்கத்திடமிருந்து போதுமான தண்ணீர் நமக்குக் கிடைக்காத காரணத்தாலே ஆறுகளில் வருகின்ற தண்ணீர் 'ஹெல்ட் ஆப்' ஆகி வாய்க்காலிலே பாய்வது கடினமாக இருக்கிறது. எனவே ஒவ்வொரு ஏரியாவிலும் ரெகுலேட்டர் கட்டி அந்தத் தண்ணீரை தேக்கி பாய்ச்சினால்தான் முறையாக வாய்க்கால்களிலே பாயும். அப்படி இல்லாமல் குறைவான அளவிலே தண்ணீர் வருகின்ற காரணத்தினாலே வாய்க்கால்களிலே தண்ணீர் 'ஹெல்ட் ஆப்' ஆகி பாய முடியாத காரணத்தினாலே அவ்வளவு தண்ணீரும் கடலிலே போய்ச் சேருகிறது. எனவே அதை கருத்தில்கொண்டு தஞ்சை மாவட்டத்தில் தேவையான பகுதிகளுக்கு இப்படிப்பட்ட ரெகுலேட்டர்களை கட்டித்தர அரசு முன் வருமா என்பதைக் கேட்க விரும்புவதோடு, ஒருசில அதிகாரிகள் இப்படிப்பட்ட ரெகுலேட்டர்களை கட்டத் தேவை . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்; அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியிலே தண்ணீர் இப்போது அதிமாக வருவது இல்லை. கடலுக்குச் செல்லக்கூடிய சூழ்நிலையும் தற்போது இல்லை. இருந்தாலும் உறுப்பினருடைய கருத்தை நான் புரிந்துகொண்டிருக்கிறேன். அதிகாரிகளோடு பேசி ஏதாவது வழிவகை செய்ய முடியும் என்றால், அதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்.